தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௰	மலர்
	சௌமிய, புரட்டாசி	
ச஼	1969–செப்டம்பர்-அக்டோபர்	சு

குறிப்பு வினை

(டாக்டர் மோ. இசரயேல், *மதுரைப் பல்கலைக் கழகம்.*)

சொல்லின் வடிவ அமைப்பை அடிப்படையாகக்கொண்டு வினைக்கு இலக்கணங் கூறிய தொல்காப்பியனார்

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங்காலைக் காலமொடு தோன்றும் (தொ. சொ. 198)

என்னும் நூற்பாவின்கண் வேற்றுமை ஏலாமை, காலமொடு தோன்றுதல் ஆகிய இரண்டும் வினையின் இயல்புகள் என்று வரையறுத்துக் கூறியுள்ளார்.

குறிப்பு வினை – பகுப்பு

அவர் வினைச் சொல்லை குறிப்பு, வினை என இரண்டாகப் பகுக்கின்றார். எல்லா வினைகளையும் போன்றே குறிப்புவினையும் உயர்திணைக் குரியன, அஃறிணைக் குரியன, இருதிணைக்கும் உரியன — ஆக அமையும் என எடுத்துக்காட்டுக்களாலும் விளக்கம் தந்துள்ளார். தொல்காப்பிய எச்சவியலில் குறிப்புவினை மூவிட வேறுபாடு உடையனவாகவும் வழங்கும் என்கின்றார்.

தொல்காப்பியத்தின்கண் உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளில் வழங்கும் குறிப்பு வினைகள் அமையுமாறு மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

உயர்திணைக்கண், உடைமைப் பொருட்கண்ணும் (எ—டு குழையினன், கச்சினன்), ஏழாம் வேற்றுமை நிலைப் பொருட்கண்ணும் (எ–டு. நிலத்தினன், புறத்தன்), ஒப்பின் கண்ணும் (எ—டு. பொன்னன்னன், புலியன்னன்), பண்பின் கண்ணும் (எ—டு. கரியன், பெரியன்) வழங்குவதோடு அன்மை, இன்மை, உண்மை, வன்மை ஆகிய சொல்லடிகளைக் கொண்டும் (எ—டு. அலன், இலன், உளன், வல்லன்) தோன்றும்.

இக்கட்டுரை அண்மையில் மதுரையில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கில் படிக்கப்பட்டது.

அஃறிணைக்கண், இன்று, இல, உடைய, உடைத்து, அன்று அல்ல என்னும் சொற்களும், பண்புகொள்கிளவியும் (எ—டு கரிது, கரிய), பண்பின் ஆகிய சினை முதற்கிளவியும் (எ—டு. குறுந்தாட்டு, குறுந்தாள), ஒப்பொடு வரூஉங்கிளவியும் (எ—டு. அன்னது, அனைய) குறிப்பு வினைகளாக வழங்கும்.

விரவு வினைகளைக் கூறும் நூற்பாவின் குறிப்பிடப்படும் "இன்மை செப்பல்" என்னும் தொடர் இருதிணைப் பொது வினைகளாகிய இல்லை, இல் என்பவற்றைக் குறித்து நிற்கின்றது என உரையாசிரியர்கள் கருதுகின்றார்கள்.

காலக் குறிப்பா? வினைக்குறிப்பா?

வினை இலக்கணங்கூறுங்கால் "நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" என்பதால் வினைச் சொல்லுள் காலம் விளக்காதனவுமுள. அவையும் ஆராயுங்காற் காலமுடையவென்றற்கு 'நினையுங்காலை' என்றார் என்பது சேனாவரையர் கருத்து (தொ. சொ. 200) தொல்காப்பியனார் இறப்பு, நிகழ்வு எதிர்வு, ஆகிய முக்காலமும் குறிப்பு வினையோடும் பொருந்தும் நிலைமையையுடையன (தொ. சொ. 200) என்கின்றார் இவண் வெளிப்படக்காலம் விளக்காதன குறிப்பு வினை என உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர். தொல்காப்பியனார் குறிப்பும் காலம் காட்டும் என்பதை உறுதிப்படுத்தும் வாயிலாகக்

> 'குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
> காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்'
> .... (தொ. சொ. 201)

என்னும் அடிகளில் எல்லா வினைச்சொல்லும் காலமொடு நிகழும் என்கின்றார்.

ஆனால் குறிப்பு வினைகளை ஆயுங்கால் அவை முக்கால வேறுபாடு உடையனவாக வழங்குதல் இல்லை.[1] அவற்றில் காலத்தைக் காட்டும் குறியீடு இல்லை என்பதும் தெளிவு. எனவேதான் உரையாசிரியர்களும் பிற்கால இலக்கண அறிஞர் பலரும் 'குறிப்பு' என்பது காலத்தையே குறிப்பது என்றும் காலத்தைக் குறிப்பாகப் புலப்படுத்துவதுதான் குறிப்புவினை அல்லது வினைக் குறிப்பின் இலக்கணம் என்றும் கருதலாயினர்.

அங்ஙனம் காலத்தின் அடிப்படையில் பெயர் பெற்றதாயின் தொல்காப்பியனார் 'காலக்குறிப்பு' என்று ஏன் பெயரிடவில்லை? பல்வேறு இடங்களில் 'குறிப்பு' என்று

அவற்றைக் குறித்த அவர் ஒரு இடத்தில் 'வினைக்குறிப்பு' (தொ. சொ. 72) என்று தெளிவாகக் குறிக்கின்றனரே! நன்னூலாரும் பல இடங்களில் (நன்னூல், 269, 321, 347, 349, 350, 351) வினைக்குறிப்பு என்றே குறிப்பிட்டுள்ளார். ஆகவே தொல்காப்பியனார் கருத்துப்படி குறிப்பாகப் பொருள் தந்து நிற்பது காலம் அன்று; வினை (தொழில்) ஆகும் என்பர் பிற்கால ஆராய்ச்சியாளர் சிலர். உரையாசிரியர்கள் காலம், தொழில் ஆகியவற்றிற்குத் தரும் விளக்கமும் இதற்கு அரண் செய்யும் வகையில் அமைகின்றது. 'இறப்பாவது தொழிலது கழிவு, நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெருமை, எதிர்வாவது தொழில் பிறவாமை; தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சி' என்கின்ற அடிப்படையில் வினையின்கண் அமைந்த பகுதிதான் புடைபெயர்ச்சியுடையதாக அமைதலாலும் குறிப்பின்கண் அமையும் பகுதி அங்ஙனம் புடைபெயர்ச்சி பெருமையாலும் அறிக. மேலும் சேனாவரையர் "கரியன், செய்யன் என்புழித் தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக்கொள்ளப்படுதலின் குறிப்பென்றார்" என்று குறிப்பிடுவதும் 'குறிப்பு' என்னும் சொல் தொழிற் குறிப்பையே புலப்படுத்துகின்றது என்பதை தெளிவுப்படுத்துகின்றது.

இவ்வாறாக ஒரு சாரார் தொல்காப்பியனார் 'குறிப்பு' என்பது காலக் குறிப்பினையே என்றும் மற்றொரு சாரார் தொழிற் குறிப்பினையே என்றும் கூறி முரண்பட்டாலும் உண்மையை ஆயின் வினைக்குறிப்பின்கண் காலமும் தொழிலும் குறிப்பாக அமைந்து கிடக்கின்றன என்பது தெளிவுறும்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளின் துணைக்கொண்டு குறிப்பு வினையின் உண்மையான இயல்புகள், அவற்றின் வடிவம், பயன் வகை (function) ஆகியவற்றை ஆராய்வோம்.

மொழியியலார் கொள்கை

மொழியியல் அறிஞர் பலரும் குறிப்பு வினையை வினையின் ஒரு தனிவகை என்றே கருதுகின்றனர். டாக்டர் கால்டுவெல் "பழந்திராவிட மொழிகள் எந்தப் பெயரையும் பெயரடையையும் வினைவிகுதி வடிவங்களை இணைத்து வினையாக மாற்றமுடியும் இவ்வினை எண், இடம் ஏற்று வந்தாலும் நிகழ்காலத்திற்கு உரியதாக அமையும்; ஏனெனில் காலக்குறிப்பு அதில் இராது" என்கின்றார்.[2]

எல். வி. இராமசாமி ஐயர் அவர்கள் "கால வேறுபாடு காட்டாத ஒருவகையான வினைகள் பெயரடி, பெயரடை அடி, வினையல் அடி (Non-Verbal roots) ஆகியவற்றோடு வினை விகுதிகளை இணைப்பதால் உண்டாகின்றன. இவை விகுதிகளுக்கு முன்னர் -அத்-, -இன்- ஆகிய இடையொட்டுகளை ஏற்றலும் கூடும்" என்கின்றார்.[3]

யூலி பிளாக் என்ற அறிஞர் இவ்வகையான அமைப்பு எல்லா திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றது என்றும் அடிப்படைப் பெயர்களோடு வினை விகுதிகள் இணைவதால் இவை அமைகின்றன என்றும் குறிப்பிடுகின்றார்.[4]

குறிப்பு வினை வடிவம்

1	கச்சினன்	கச்சு + இன் + அன்
	கழலினன்	கழல் + இன் + அன்
	துப்பினை	துப்பு + இன் + ஐ
	அன்பன்	அன்பு + அன்
	அகத்தன	அகம் + த் + அன் + அ
	களிற்றினர்	களிறு + இன் + அர்
	கண்ணேம்	கண் + ஏம்
	புறத்தன்	புறம் + த் + அன்
2	கரியன்	கரு (கரி) + ய் + அன்
	நல்லன்	நல் + அன்
	பெரியர்	பெரு (பெரி) + ய் + அர்
	கரிது	கரு (கரி) + து
3	உடையன்	உடை + ய் + அன்
	அல்லன்	அல் + அன்
	உளன்	உள் + அன்

மேற்கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பு வினையடிகளை ஆயுங்கால் முதல் வகையின பெயரடிகளாகவும், இரண்டாம் வகையின பெயரடை அடிகளாகவும் வேறுசில இவை இரண்டிலும் வினையடிகளிலும் அடங்காதனவாகவும் உள்ளன என்பதை அறிதல் இயலும்.

குறிப்பு வினைகளின் பாகுபாடு

தொல்காப்பியனார், பவணந்தி முனிவர், உரையாசிரியர் ஆகியோர் குறிப்பிடும் குறிப்பு வினைகளை மூன்று வரைகளாகப் பாகுபாடு செய்யலாம்.

1 பெயரடியாகத் தோன்றிய ஆக்கப்பெயர்கள்
எ—டு. கச்சு + இன் + ஆன்
கண் + ஏம் முதலியன.

2. பெயரடை யடியாகத் தோன்றும் பெயர்கள்
எ—டு கரியன், செய்யன் முதலியன.

3. பிற அடியுடன் அமையும் குறைவினைகள்
எ—டு அல்லன், உளன், உள முதலியன.

குறை வினைகள்

வினைக் குறிப்பின்கண் அடங்கும் குறைவினைகள் அல்—, இல்—, உடை—, உள்—, அன்— ஆகிய அடிகளினின்று தோன்றுபவையாகும் இவை பெயரடிகளோ பெயரடையடிகளோ இல்லை. பெயரடை அடிகட்கும் வினையடிகளுக்கும் இடைப்பட்ட தன்மையுடையன எனலாம். இவைகளைக் குறைவினை அடிகள் என்று கூறுதல் சாலப்பொருந்தும். இவற்றோடு வினைவிகுதிகளை இணைத்துக் குறைவினை முற்றுகள் ஆக்கப்படுகின்றன. குறிப்பு வினையின்கண் இலக்கண நூலார் கூறும் இந்தச் சொற்களே வினைகளாகும் ஏனையவை பெயர்களேயாகும். இவை காலக் குறியீட்டை ஏற்பதில்லை, எதிர்மறைக் குறியீட்டையும் பெறுவதில்லை, இவண் இல்—, அல்— என்னும் அடிகள் இயல்பாகவே எதிர்மறை அடிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வினையடிகள் பிற தொழில்வினையடிகளைப்போன்று ஏவலாக வழங்குதல் இல்லை. இவற்றில் தன்வினை பிறவினை வேறுபாடுகூட அடைதல் இயலாது. இவ்வடிகளினின்று தொழிற் பெயர்கள் கூட ஆக்கப்பெறுதல் இல்லை. தொழில் வினையடிகளினின்று வியங்கோள் வினைமுற்றுகள் அமைதல் இயலும். ஆனல் குறை வினையடிகளினின்று வியங்கோள் வினைமுற்றுகள் அமையா. எனவே இவை வினைகளாகச் செயலாற்றினும் குறைவினைகளே ஆகும்.

குறைவினைகளின் அமைப்பினையும் அவை பல்வேறு பால்களில் வழங்கும் பான்மையினையும் கீழே காண்போம்.

அடிகள்	ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒன்றன்பால்	பல்வின்பால்
அல்–	அல்லன்	அல்லள்	அலலர்	அன்று	அல்ல
இல்–	இலன்	இலள்	இலர் இன்று	இன்று	இல
உள்–	உளன்	உளள்	உளர்	உண்டு	உள
உடை–	உடையன்	உடையள்	உடையர்	உடைத்து	உடைய
அன்–	அன்னன்	அன்னள்	அன்னர்	அனைது	அன்ன

குறிப்பும் குறைவினையும்

குறிப்பில் இலக்கண நூலார் கொள்ளும் இவையாவும் வினைகளே என்பதற்குப் பின்வரும் சான்றுகளைக் காட்டுதல் இயலும்.

1. தொல்காப்பியனார் வினையும் குறிப்பும் செயப்படு பொருளை ஏற்று வழங்கும் (தொ. சொ. 72) என்று கூறி இருப்பினும், குறிப்பின்கண் குறைவினை என்று பாகுபாடு செய்யப் பட்ட சொற்கள் மட்டுமே செயப்படு பொருளை ஏற்று வழங்கு தலும் பிற ஏலாமையும் அறிதற்பாலது.

எ—டு. யாம் எந்தை இலம்
யான் பொருள் உடையன்
அவன் புலி அன்னன்

2. இக்குறைவினைகள் இங்குக் குறிப்பிக்கப்பட்டிருக்கும் வடிவ அமைப்பிலும் வழக்கு நிலையிலும் பயனிலையாக மட்டுமே வழங்குவதாகும். பயனிலையாக வழங்குதல் வினையின் இயல்பாம்.

எ—டு அவன் அல்லன்
அது அன்று
அவர் இலர்

இவ்வினைகள் வடிவு மாற்றம் பெற்று அல்லது உருபு ஏற்று அலலது முன்வினைகளை ஏற்று மட்டுமே பெயர்களாகச் செயலாற்ற முடியும்.

3. வினைகள் வினையெச்சத்தால் தழுவப்படுதல் இயல்பு. அதாவது வினைகள் வினையெச்சங்களின் முடிக்கும் சொல்லாகச் செயலாற்றுகின்றன. ஒருங்கான பிறவினைச் சொற்களைப் போன்று குறைவினைகள் வினையெச்சங்களால் தழுவப்படு கின்றன.

எ டு அவன் பொருள் பெற்று இலன்
அவள் பொருள் கொடுத்து உளள்

4. குறைவினைகளுக்குப் பதிலாக அவ்விடத்தில் ஒழுங்கான வினைகளைத்தான் அமைக்க முடியும்; பெயர்களை அமைத்தல் இயலாது.

எ—டு அவன் வந்து இலன்
அவன் வந்து ( ) சென்றான்.

அவன் பொருள் உடையன்
அவன் பொருள் ( ) தந்தான்.

அவன் நல்லவன் அல்லன்
அவன் நல்லவன் ( ) ஆயினான்.

5. குறைவினை யடிகளினின்று குறைவினை எச்சங்கள் அமைதல் இயலும்.

எ—டு. அல்— அன்றி அல்லா
இல்— இன்றி இல்லா
உள்— — உள்ள
உடை— உடைய

6. வினையெச்சம் ஏற்கும் முடிக்குஞ் சொற்களைக் கூறும் தொல்காப்பியனார்,

வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே (தொ. சொ. 432)

என்னும் நூற்பாவின்கண் குறிப்பு வினை ஆக்கவினையொடும் முடிவு பெறும் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் குறிப்பின்கண் அவர் அமைத்துள்ள குறைவினைகள் ஆக்கவினைகளை ஏற்றுத்தான் முடியவேண்டும் என்ற உறுதி வழக்கில் காணப்படுதல் இல்லை.

எ—டு. அவன் பொருள் உடையன்
அவன் நல்லவன் அல்லன்

எனவே தொல்காப்பியனார் இங்குக் குறிப்பிடும் வரையறை அவர் குறிப்பின்கண் கொள்ளும் வினையல்லாத ஆக்கப் பெயர்களுக்கே முழு அளவில் பொருந்துவதாகும்

வினைக்குறிப்பும் பயன்வகையும்

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் குறிப்புவினைகளின் வினை இயல்பு வினைஅல்லாத இயல்புகள் அனைத்தும் ஆய்ந்த பின்னர் பயனிலைகளாகச் செயலாற்றும் பெயர்கள்தான் குறிப்பு வினைகள் என்று முடிவு கூறி உள்ளார்கள்[5]. பெயரடிகளினின்றும் பெயரடை அடிகளினின்றும் ஆக்கப்படும்

குறிப்பு வினைகளைப் பொறுத்த வரையில் பேராசிரியர் அவர்களின் முடிவு முற்றிலும் ஏற்றுக்கொள்ளற்குரியதே. அவை பெயர்களாகவே செயலாற்றுவதால் அவற்றைப் பெயர்வகைகளில் ஒன்ருன ஆக்கப் பெயர்களாகக்கொள்ளலாம். ஆனல் இலக்கண நூலார் வினைக்குறிப்பின்கண் கொள்ளும் குறைவினைகள் வினைகளாகவே செயுலாற்றுகின்றன என்பது முன்னர் தெளிவுபடுத்தப்பட்டது. அவை வினைகளே ஆகும் என்பது உறுதி

முடிவு

எனவே வினைக்குறிப்பு என்று இலக்கண நூலார் கொண்டிருக்கும் சொற்கள் காலம், தொழில் ஆகியவற்றைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன என்பதும், அவற்றுள் பெயரடி, பெயரடையடி ஆகியவற்றுடன் விகுதிகள் இணைந்து அமைவன பெயராகும் என்பதும், பெயரடை அடிக்கும் வினை அடிக்கும் இடைப்பட்ட இயல்பு வாய்ந்ததும் ஏவல் வினையாக வழங்காததுமான குறை வினையடிகள் வினைவிகுதிகளை ஏற்றுக் குறைவினைகளாக அமைகின்றன என்பதும் குறைவினைகள் வினைகளின் இயல்பைப் பெற்றுச் செயலாற்றுவதால் வினைகளே ஆம் என்பதும் அறிகின்றனம்.

வினைக்குறிப்புகள் பல ஆக்கப்பெயர்கள், சில குறைவினைகள் ஆகியவற்றின் தொகுப்பேயாகும்.

அடிக் குறிப்புகள்.

1. தொ. சொ. 194. தெய்வச் சிலையார் "உடையன் என்பது முன்பு உடையன், இப்போது உடையன், பின்பு உடையன் என்று மூன்று காலத்திற்கும் வேற்றுமைப் பட நில்லாமையின், காலம் குறித்துக்கொள்ளப்பட்டது" என்கின்ருர்

2. Caldwell, R., A. Comparative Grammar of Dravidian Languages, 1961. p. p. 477. 478-
3. Ramaswami Ayyar, L. V., "The Morphology of Old Tamil Verbs," Anthropos, *33* (1938) p. 776
4. Bloch, Jules, The Grammatical Structure of Dravidian *Languages*, *1954*. p. *37*-
5. Varadarajanar, M. "குறிப்பு வினை" Tamil Culture VIII (1959), p. 92.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

பத்திரிகை முதல்வர் திரு. வி. க.

திரு. சாலை இளந்திரையன், எம்.ஏ., எம். லிட். டிப். இன். யூ. என். அய். யூ.

கூட்டு முயற்சிக்கு முதல் தேவை, இணங்கியும் இணக்கியும் செல்லும் ஒரு பண்பு. இது, தொடர்புடைய எல்லாருக்கும் தேவையேயானாலும், — 'எல்லார்க்கும் நன்றாம் *பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து"* என்பது போல, — *தலைவர்களுக்கு* இது *தலையாய* தேவை. *அண்ணமக்காலத்தில் இதை நன்கு உணர்ந்து கடைப்பிடித்த* ஒரே தமிழர் திரு. வி. க. அதனாலேதான் அவருடைய *பத்திரிகைப்பணி அரிய சாதனையாக முகிழ்க்க முடிந்தது.*

மிகுதியான பிறமொழிக்கலப்பைப் பலர் செய்து கொண்டிருந்ததால், தமிழகத்தில் தனித்தமிழ் இயக்கம் ஒன்று பிறந்தது. அதன் விளைவாக. "மொழிக்கலப்பர்"களின் போக்கில் குறிப்பிடத்தக்க மாறுதலும் ஏற்பட்டது. திரு. வி. க. அவர்கள் பத்திரிகை ஆசிரியராக வந்தபோது தமிழ்நாட்டுப் பொதுவாழ்வில் தமிழின் நிலை எவ்வாறு இருந்தது என்பதையும் அவர் சிலகாலம் பத்திரிகைப் பணி புரிந்தபின் அதன் நிலையில் ஏற்பட்ட மாறுதல் என்ன என்பதையும் பலர் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"அதுவரையில் அரசியல் காரியங்கள் எல்லாம் ஆங்கில பாஷையிலேயே நடந்து வந்தபடியால், தமிழை முன்னணிக்குக் கொண்டுவருவது சுலபமான காரியமாயில்லை. தமிழில் சிலர் பேசவும் எழுதவும் அப்போது ஆரம்பித்திருந்த போதிலும், கொச்சைத் தமிழில் ஏதோ 'காமாசோமா' வென்று ஒப்பேற்றுவதாகவே கருதப்பட்டு வந்தது"[39]

உயிரற்ற தேசீயம்

இந்தக் "காமாசோமாக்கள்" பெரும்பாலும் தமிழ்ப் பயிற்சி இல்லாதவர்கள்; வேறுவேறு துறைகளை ஆங்கிலத்தில் பயின்றிருந்தவர்கள். தமிழ்நாட்டுப் பொதுமக்களோடு அவர்களுக்குத் தொடர்பே இருந்ததில்லை. காங்கிரசைப்

---

39. பாரதியார் பிறந்தார். பக்கம், 48

பெரியதோர் மக்கள் இயக்கமாக உருவாக்கும் நோக்கமும் அவர்களுக்கு இருந்ததில்லை...“தொடக்கத்தில் காங்கிரசில் சேர்ந்தவர்களுள் தேசபக்தர்களாக மிளிர்ந்தவர் ஒரு சிலரே. ஏனையோர், தம் பெயரை விளம்பரஞ் செய்து, அதனால் ஒருவிதப் பேறுபெறும் நோக்குடையராயும், அரசாங்க உத்தி யோகத்தில் குறிக்கொண்டு நிற்பவராயும், ஆங்கிலத்தில் தமக்குள்ள நாவன்மையைக் காட்டுபவராயுமிருந்தனர்.. இப் பெரியோர்களும் காங்கிரஸ் செய்யும் தீர்மானங்களைக் காங்கிரஸ் பந்தரிலேயே விடுத்து வருவார்கள் அவைகளைத் தேசத்திலுள்ள பொதுமக்களுக்குத் தலைவர்கள் அறிவுறுத்து வதில்லை. அக்காலத்திருந்த காங்கிரஸ் கூட்டத்தார், தாம் காங்கிரசுக்குச் சென்று திரும்புஞ் செய்தியைத் தம் மனைவி மக்களுக்கே சொல்லமாட்டார்!”[40]...

இந்த நிலையை மாற்றிக் காங்கிரசைத் தமிழகத்தில் மக்கள் இயக்கமாக மாற்றும் எண்ணம் தலைவர்களுக்கு ஏற்படவே இல்லை பஞ்சாபிலும் வங்காளத்திலும் தேசீய இயக்கம் மக்கள் இயக்கமாகி வந்ததைப் பார்த்துச் சில தீவிர வாதிகள், தங்கள் தமிழகம் தட்டி எழுப்பப்படவில்லையே என்று பொருமினார்கள். அதன் விளைவாக, “1918–1919ல் தீவிர தேசபக்தி கொண்ட ஒரு கூட்டத்தார் தமிழ்நாட்டின் அரசியல் உலகில் பிரவேசம் செய்தனர். காங்கிரஸ் ஸ்தா பனத்தைக் கைப்பற்றி, அதன்மூலம் தமிழ்நாட்டைத் தேசீய இயக்கத்தின் முன்னணியில் கொண்டு நிறுத்த அவர்கள் திட்டம் போட்டுக்கொண்டு வேலைசெய்யத் தொடங்கினார்கள். பூரண தேசபக்தர்கள் ஆனபடியால் அவர்களுக்குத் தாய் மொழிப்பற்றும் இருந்தது”[41]

திரு. வி. க. தமிழ்

இந்தத் தீவிரத் தேச–மொழிப் பக்தர்களிலே ஒருவர்தான் திரு. வி. க. இந்த வரலாற்றுப் பின்னணியிலேதான் திரு. வி க. வின் தமிழ்நடையை ஆராய வேண்டும். ஆங்கி லமும் கொச்சைத் தமிழுமாக எழுந்து மக்களைக் குழப்பிக் கொண்டிருந்த இடத்தில் தமிழ்மணம் கமழச் செய்வதே திரு வி. க. வின் முதற்பணியாக அமைந்தது. எனவே

40. தேசபக்தன் 29—10—1920
41. பாரதி பிறந்தார், பக்கம், 48

சொல்லிலும், சொற்களைக் கோத்து வாக்கியமாக்கும் தோரணையிலும் முழுக்க முழுக்கத் தமிழாகவே அவருடைய நடை அமைய வேண்டியதாயிற்று. ஆயினும் திரு வி. க. தனித் தமிழ், தூய தமிழ் என்பவற்றின் வழியில் செல்லாமல், "நல்ல தமிழ்" என்னும் ஒரு பொதுநெறியையே கடைப்பிடித்தார் என்பது கவனிக்கத் தக்கது.

தம்முடைய தமிழ்நடை வளர்ச்சியைப் பற்றிப் பிற்காலத்தில் திரு. வி. க.வே பின்வருமாறு கூறுகிறார்:— "என் வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின. ஒன்று இளமையில் உற்றது: இன்னென்று சங்க இலக்கியச் சார்பு பெற்றபோது பொருந்தியது; மற்றொன்று பத்திரிகை உலகை அடைந்த நாளில் அமைந்தது. இறுதியே எனக்கு உரியதாய் 'உடைய தாய்' நிலைத்தது. இந்நடை எளியது; சிறுசிறு வாக்கியங்களால் ஆவது "[42]

திரு. வி. க. அரசியலில் நுழைந்த வரலாற்றை நாம் அறிவோம். தேசீய எழுச்சியைத் தமிழ் மக்களிடையே பரப்ப வேண்டுமென்பதே அவருடைய "அரசியல் பிரவேச"த்தின் முக்கியமான நோக்கம். அந்த நோக்கை நிறைவேற்றும் வகையிலேயே அவர் தமது நடையை எளிமையாக்கிக் கொண்டார். சங்க இலக்கியத்தோடு தொடர்புபட்ட காலத்தில் அவருக்கு அமைந்த நடையை அவர் பத்திரிகையில் கையாளவில்லை.

அவருடைய நடையில் ஏற்பட்ட "எளிமை"யைப் பற்றி அப்போதே விவாதம் கிளம்பிவிட்டது. தமிழில் பிறமொழிகளைக் கலந்தும் மரபுவழித் தமிழ்வாக்கிய அமைப்புக்கு முழு முக்கியத்துவம் கொடுக்காமலும் அவர் எழுதி வருவதாக அப்போதே சிலர் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். "தேசபக்தன்" பத்திரிகை தொடங்கிச் சுமார் ஒன்றரையாண்டுகளுக்குப் பின், (மே, 1919) பக்தனில் வந்த தலையங்கக் கட்டுரைகளை ஒரு நூலாக வெளியிட்டார் திரு வி. க. அதன் முன்னுரையில் அவர் எழுதியுள்ள குறிப்பு, "தமிழ்நடை" பற்றிய அக்காலப் போராட்டத்தை ஒருவாறு விளக்குகிறது:

"பண்டைத் தமிழ்மக்கள் உரைநடையில் எனக்குப் பெரும் பற்றுண்டு. பிறமொழிக் கலப்பின்றித் தமிழ் பேசல்

42. திரு. வி க. வாழ்க்கைக் குறிப்புக்கள்

வேண்டும், எழுதல் வேண்டுமென்னும் ஆர்வமும் எனக்குண்டு (ஆயினும்) செவ்விய தமிழ்நடை தமிழ்நாட்டிலுள்ள பல்லோர்க்கு இதுபோழ்து பயன்படாதென்று கருதித் 'தேசபக்த'னுக்கெனச் சிறப்பாக ஒருவகை உரைநடையைக் கொண்டுள்ளேன் இதுகாலைத் தமிழ்நாட்டு வழக்கிலுள்ள பிறமொழிக் குறியீடுகளையும் இக்கால வழக்குச் சொற்களையும், ஆன்றோராட்சி பெறாத சில முறைகளையும் பண்டைத் தமிழ் மக்கள் கோலிய வரம்பிற்குப் பெரிதும் முரணாதவாறு ஆண்டு வருகின்றேன்."[43]

தமது கருத்துக்கள் தம்மோடு வாழும் தமிழ்ப் பொது மக்களை எட்டவேண்டும், அதன்மூலம் அவர்கள் விழிப்படைய வேண்டும் என்பதே அவருடைய கருத்தாக இருந்தது. இருக்கவே, 'பழைய தமிழே தமிழ்' என்ற பிடிவாதத்துக்கோ, பிறமொழிச் சொற்களைத் தாராளமாக அள்ளிக் கலந்து தமிழ் மக்களின் மொழியை அவர்களுக்கே அந்நியமாக்கிய அக்கால அரசியல்வாதிகளின் போக்குக்கோ அவர் நெஞ்சில் இடமில்லாது போயிற்று.

தனி நடை

தமது நடையைப் "பத்திரிகைக்கு உரியது என்று திரு. வி. க. குறிப்பிட்ட போதிலும், மற்றப் பத்திரிகைகளின் நடைக்கும் அவருடைய 'தேசபக்தன்', 'நவசக்தி' பத்திரிகைத் தமிழ்நடைக்கும் பெரிய வேறுபாடு இருந்தது. நாளிதழாகத் தேசபக்தன் நடத்திய காலத்திலும் அவருடைய தமிழ் கொழுஞ்சொற்கள் நிறைந்து வளமுடையதாக விளங்கியது. வார இதழாக நவசக்தி நடத்திய காலத்திலும் அந்தச் செந்தமிழ் வளம் இடையறாது நின்றது இலக்கியத்தில் பயின்ற செஞ்சொற்களை இயல்பாக எடுத்தாளும் திறன் அவரிடம் என்றும் காணப்பட்டு வந்தது."[44]

இந்த இயல்புக்கு முக்கியமான காரணம், அவர் அரசியலில் அடி எடுத்து வைக்குமுன்பே, நிறைந்த இலக்கியப் பயிற்சியால் அவர் உள்ளம் தெளிவுபட்டிருந்தது. கொள்கை, கோட்பாடுகளிலும் ஏற்கனவே அவர் உள்ளம் ஒழுங்கும் உறுதியும் பெற்றிருந்தது. அதாவது, அவர் தமது

---

43. தேசபக்தாமிர்தம் முன்னுரை
44 டாக்டர் மு. வ.: திரு. வி. க.: பக்கம், 19

கருத்துக்களாலும் செயல்களாலும் தமிழக அரசியலை உருவாக்கும் நிலையில் இருந்தார்; அரசியல் அவரை உருவாக்கும் அளவுக்கு அவர் தெளிவற்றவராக இருக்கவில்லை. எனவே, அவரிடம் படிந்த தமிழ் நடை அரசியலால் மிகுதியாகப் பாதிக்கப்படவில்லை.

இன்னும் தெளிவாகச் சொன்னால், இன்றிருக்கும் தமிழாசிரியர்களில் பலர்போல, அவர் கட்சி அரசியல் வெள்ளத்தில் நிலைதடுமாறி அதன் போக்கிலே செல்லவில்லை; அன்றிருந்த தமிழாசிரியர்களில் பலர் போல, அரசியலைவிட்டு ஓடி ஒதுங்கிவிடவும் இல்லை. ஊன்றிய கால்களோடு அரசியல் வெள்ளத்தில் நின்றார்; அதன் போக்கு இவரால் மாறியதே தவிர, இவருடைய தமிழ்ப்போக்கை அது கரைத்துவிடவில்லை. "திரு. வி. க. தமிழ்நாட்டு அரசியலில் பிரவேசித்த பிறகு தான் தமிழ்மொழி சுயமதிப்புடன் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கியது" இது அவருடைய சாதனைக்குக் 'கல்கி' வழங்கியுள்ள பாராட்டு

மேடை நடை.

திரு வி. க. வின் தமிழ் நடையில் அமைந்த மற்றொரு அம்சம் அதன் மேடைப்பேச்சுத் தோரணை. அக்காலத்தில் அரசியல்பணி என்பது வெறும் எழுத்தோடு நிற்கவில்லை; சொல்லப் போனால். எழுத்தைவிடப் பேச்சுப் பணியே அக்காலத்தில் மிகுதி. தமிழ் மக்களிடையே தமிழில் பேசத்தான், தமிழகக் காங்கிரசிலும் அக்காலத்தில் ஆள் பஞ்சம் ஏற்பட்டிருந்தது அதைப் போக்கத்தானே இவர் போன்றவர்கள் அரசியலில் குதித்தார்கள் ?

"பொதுவாக, பேச்சிலே வல்லவர் எழுத்திலே வல்லவராக இருப்பதில்லை. ஒரு சிலரே இரண்டிலும் வல்லவராயிருப்பர் இந்த ஒரு சிலரில் தலை சிறந்தவராயிருந்தார் முதலியார். அதிலும், பேசுவதைப் போலவே எழுதுவார்; எழுதுவதைப் போலவே பேசுவார். இரண்டுக்கும் வேற்றுமையே தெரியாது"[45]

"பேசுவதைப் போலவே எழுதவேண்டும்" என்று அக்காலத்தில் எழுந்திருந்த கொச்சைத் தமிழ்க் கட்சியோடு

---

45. நான் கண்ட நால்வர்: பக்கம், 65

இதைக் குழப்பிக்கொள்ளக் கூடாது. அன்றுடக் கொச்சைத் தமிழ்ப் பேச்சையே எழுத்துத் தமிழாக்கிவிடச் சிலர் முயன்று வந்த காலத்தில், இலக்கண வரம்புக்குட்பட்ட எளிய தமிழே, எழுத்துத் தமிழாகவும் பேச்சுத் தமிழாகவும் அமைய வேண்டும் என்று கருதி அவ்விதமே செய்து வந்தவர் திரு. வி. க. ' தேசபக்தன் பத்திரிகையில் தூய செந்தமிழ் நடையில் அவர் எழுதியதோடில்லை ; பத்திரிகையில் எழுது வது போலவே பொதுக் கூட்டங்களிலும் பேசினார். அவரு டைய சொற்பொழிவைச் சுருக்கெழுத்தில் எடுத்துப் பார்த் தால் 'தேச பக்தன்" தலையங்கம் மாதிரியே இருக்கும். சொல்லமைப்பு வாக்கிய அமைப்பு எல்லாம் அப்படியே அச்சாக இருக்கும். அந்தந்த இடத்தில் கால் புள்ளி. அரைப் புள்ளி, முற்றுப்புள்ளி, வியப்புக்குறி, கேள்விக்குறி இவை களைப் போட்டுவிட்டால் போதும்." 46

தலையங்கத்தமிழ்.

ஒரு முக்கியமான குறிப்பு இங்கே கவனிக்கத் தக்கது ; பத்திரிகைத் தலையங்கம் என்பது ஏதாவது ஒரு பொருளைப் பற்றி எழுதப்படும் கட்டுரை அல்ல ; எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றி, ஆசிரியர் தமது வாசகர்களுக்கோ மற்றவர் களுக்கோ நிகழ்த்தும் கருத்துரையே அது. எனவே, தலையங்கம் கட்டுரைத் தமிழாக இல்லாமல் மேடைத் தமிழாக அமைவதே சிறப்பு. இதைத் தமிழ்ப் பத்திரிகையில் திரு. வி க. வே முதலில் கையாண்டார் ; ஆயினும் பெரும் பாலான பத்திரிகையாளர்கள் இதைப் புரிந்து பின்பற்ற வில்லை.

இங்கே மற்றொரு குறிப்பையும் கவனிக்க வேண்டும் : இவருடைய மேடைப்பாணி தலையங்கத்தோடு நிற்கவில்லை ; அது போன்ற கருத்துரைப் பகுதிகளோடும் நிற்கவில்லை. அவர் பிற்காலத்தில் எதுபற்றி எழுதினாலும் அதில் மேடைத் தமிழின் இயல்பே மேலோங்கி நின்றது

ஒன்றின் முனைப்பு மற்றொன்றையும் பாதிக்கின்ற இந்தக் குறை திரு. வி க. வுக்கு மட்டுமே உரியதல்ல. புதுவது புனையப்போன ஒவ்வொருவரும் இந்தக் குறைக்கு ஆட்பட்டே

46, பாரதி பிறந்தார் ; பக்கம், 48

உள்ளார்கள். இதே காலத்தில் வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியின் கவிதை எளிமையின் பேரால் இசைப்பாடலாகவே பெரும்பாலும் போய்விட்டது; 'பிரமாண்டமான' பொருள்களைப் பற்றி எழுதுவதற்காக ஒரு 'கனத்த நடை' யைப் பழக்கப்படுத்திக் கொண்ட வ. வே. சு. அய்யர், சிறு கதை எழுதும்போதும் அதற்கேற்பத் தமது நடையை எளிமைப் படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆதலால் இதை ஒரு பெருங்குறையாகக் கருத வேண்டியதில்லை. மேலும், திரு. வி. க. வின் பணிகளுள் முக்கியமானதாகிய பத்திரிகைப் பணிக்கு அவருடைய நடை மிகு பொருத்தமாகவே அமைந்தது.

தெரிந்தே அமைத்த நடை.

தவிரவும், திரு. வி. க வின் தலையங்கத் தமிழ்நடை அவரை அறியாமலே அமைந்ததன்று. ஒவ்வொரு துறை முன்னோடியையும் போல, திரு. வி. க, வும் தமது நடையின் இயல்பை அறிந்தே கையாண்டார். இந்தத் தலையங்கங்களும் சில கட்டுரைகளும் அடங்கிய தமது நூல்களைப்பற்றி அவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

"தமிழ்த்தென்றலும் சீர்திருத்தம் அல்லது இளமை விருந்தும் என்னுடைய எழுத்துப் பேச்சைக் கொண்ட நூல்கள், எனது எழுத்துப் பேச்சில் பீடும் மிடுக்கும், எழுச்சியும் கிளர்ச்சியும், வீறும் வீரமும் மதர்த்து ஏக்கழுத்தம் பெற்ற நடை சிற்சில இடங்களில் திகழும். அவைகள் அமையும் முறையிலேயே எனது எழுத்துப் பேச்சுக்கள் ஆக்கப்பட்டன "[47]

தம்முடைய எழுத்துக்கு "எழுத்துப் பேச்சு" என்று அவர் புதிய பெயர் ஒன்று சூட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. தமது பத்திரிகையில் எழுதியபோது, அந்த எழுத்தின் மூலமாக மக்களுடன் பேசுவதாகவே அவர் கருதியதை இந்தப் பெயர்சூட்டு நமக்குத் தெரிவிக்கிறது. தம்முடைய மொழி நடை, ஏற்கனவே இருந்துவரும் எழுத்து நடையும் மேடைப் பேச்சு நடையும் அல்லாத புதிய ஒன்று என்பதை அவர் உணர்ந்தே இருந்தார் என்பதே இதன் கருத்து

47. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்.

எனவே, காலத்துக்கும் கருத்துக்கும் தம் நோக்குக்கும் இசைந்த ஒரு புதிய நடையைத் தேர்ந்து தெரிந்தே இவர் கையாண்டார் என்பது வெளிப்படை.

இனிய தமிழ்

இந்த நடையைப் பண்டிதர்கள் வெறுத்து வந்தது போலவே, 'இலக்கணத்தைக் கட்டிச் சுருட்டிக் கடலில் போட வேண்டும்!" என்று முழக்கிய புதுமை எழுத்தாளர்களில் ஒரு சாராரும் வெறுத்தார்கள். ஆனால் இருவரும் சாட்டிய குற்றங்கள் வெவ்வேறு: புலவர்கள், இவர் தமிழை, 'இலக்கண வரம்பற்ற பிழைத் தமிழ், கலப்புத் தமிழ்" என்றெல்லாம் பழித்தார்கள்; இலக்கணம் என்றாலே நடுங்கிய புதியவர்கள், பண்டிதத் தமிழ் என்றும் கொடுந்தமிழ் என்றும் அதைப் பழித்தார்கள். ஆனால், "உண்மையில் முதலியார் எழுதி வந்தது கொடுந்தமிழுமல்ல, கடுந்தமிழுமல்ல. செந்தமிழ்; இலக்கண வரம்புக்கு உட்பட்டுக் களிநடம் புரியும் இனியதமிழ்."[48]

முதல் உதவி

தமிழ்நாட்டின் எழுத்திலும் பேச்சிலும் நல்ல தூயதமிழே வழங்கவேண்டும் என்பதே திரு. வி. க. வின் கொள்கை. ஆனால் அவர் வாழ்ந்த காலம், குறிப்பாக அவர் பத்திரிகைத் தொண்டு தொடங்கிய காலம் தூய தமிழுக்கு வெகு தொலைவிலிருந்த கலப்புத் தமிழ்க்காலம் அக்காலப் படித்தவர்கள் சமஸ்கிருதக் கருத்தும் சொற்களும் மிகுதியாகக் கலந்த சமயத் தமிழில் கல்விகற்று அதையே தமிழ் என்று கருதிவந்தார்கள் அரசியலின் பேரால் ஆங்கிலத்தை அள்ளிக் கலந்து, தமிழை மேலும் அவியலாக்கவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அந்த எல்லையிலிருந்து மீட்டு, ஓரளவு நல்ல தமிழ் படிக்கவும் எழுதவும் பழக்குவதே அப்போது நடைபெற வேண்டிய பணி.

ஒருநெறியில் பலகாலம் பழகிவிட்ட மக்களைச் சிறுகச் சிறுகத்தான் மாற்றவேண்டும்; ஒரே அடியாக மாற்றப் புறப்பட்டால், பயந்து ஓடித் தங்கள் பழ நெறிக்குள்ளேயே பதுங்கிக்கொள்வார்கள்! இந்த "விடுவிப்பு நெறி"யை அறிந்து, அதற்கேற்ற தமிழ் நடையைக் கையாண்டார் திரு வி. க

48. நான்கண்ட நால்வர்: பக்கம், 36

கடந்த அய்ம்பது ஆண்டுகளில் பேச்சுத் தமிழும் பத்திரிகைத்தமிழும் எவ்வளவோ தூய்மையும் தெளிவும் அடைந்துள்ளன. இந்த வளர்ச்சிக்குத் தொடக்கஞ் செய்தவர் திரு. வி. க வே. எனவே பிறமொழிகளால் அடியுண்டு சாய்ந்த தமிழுக்குப் பத்திரிகைத் துறையில் "முதலுதவி" செய்த பெருமை திரு. வி. க வையே சேருகிறது.

வளரும் தமிழ்

திரு. வி. க. வின் நடையைப் பற்றிய மற்றொரு முக்கியமான உண்மையையும் நாம் மறந்து விடுதலாகாது. இவருடைய 'தேசபக்தன்' தொடக்கால இதழ்களையும் 'நவசக்தி' யின் கடைசிக்கால இதழ்களையும்* பக்கம் பக்கமாக வைத்துப் பார்க்கையில் இவருடைய தமிழ்நடையில் சிறுகச் சிறுகப் பிறமொழிக் கலப்புக் குறைந்து கொண்டே வந்திருப்பது தெரிகிறது அவர் தமது நடையைக் காலத்தோடும் தமது இதழ்களைப் படித்துவந்த மக்களின் வளர்ச்சியோடும் மாற்றிக் கொண்டே வந்தார் என்பதற்கு அதுவே சான்று.

தொடக்க காலத்தில் (1917) "செவ்விய தமிழ்நடை தமிழ் நாட்டிலுள்ள பல்லோர்க்கு இதுபோழ்து பயன்படாது" என்று கருதினர். ஆனால் அவர்களைச் சிறுகச் சிறுகச் செவ்விய தமிழ்நடை படிப்போராக மாற்ற வேண்டும் என்பதே அவர் எண்ணம். அதற்கேற்பவே அவர் செயலாற்றினர். "பத்திரிகைப்பணி, மக்களின் நிலையில் தொடங்க வேண்டும்; காலப்போக்கில், அது தானும் வளர்ந்து மக்களையும் வளர்த்து வரவேண்டும்". இந்தக் கருத்தைச் செயலாக்கிக் காட்டியுள்ளார் திரு. வி. க. அவர் ஓர் இலட்சியப் பத்திரிகையாளர் என்பதில் அய்யம் ஏது?

முடிவுரை

திரு. வி க. வின் பணி பலதிறப்பட்டது. தமிழாசிரியராகத் தொடங்கி, பத்திரிகை ஆசிரியராகவும் தேசீயத் தொழிற்சங்க வாதியாகவும் வளர்ந்து, சமரச ஞானியாக வாழ்ந்து முடிந்தவர் திரு. வி. க. பிறப்பினுல் சைவராகிய அவர், தொடக்க காலத்தில், தீவிரமாக அச்சமயத்துக்குத் தமது எழுத்தாலும் பேச்சாலும் தொண்டாற்றினர். காலத்துருவேறி மாசுண்டு கிடந்த சைவத்தின் உண்மையான வடிவத்தைத் துலக்கிக் காட்டும் பணியையே தலைமைப் பணியாகக் கருதினர்.

பெரியபுராணத்தை அரும்பத விளக்கத்தோடு வெளியிட்ட திரு. வி. க. சைவத்திறவு, காரைக்காலம்மையார் திருமுறை (பதிப்பு), நாயன்மார் வரலாறு, கடவுட்காட்சியும் தாயுமானரும் முதலிய நூல்களை வெளியிட்டார். பட்டினத்தார் பாடல்களையும் உரையுடன் வெளியிட்டார்.

---

* தேசபக்தன் ஆசிரியப் பொறுப்பு : 7—12-'17 முதல் 22—7—20 வரை; நவசக்தி 20—10—'20ல் தொடங்கிச் சுமார் 20 ஆண்டுக்காலம் நடைபெற்றது.

காலப்போக்கில் அவர் உள்ளம் பெண்ணின் பெருமையிலும், இயற்கை வழிபாட்டிலும், சமய சமரச நோக்கிலும் திரும்பியது. நாட்டில் ஏற்பட்ட சுதேசி இயக்கம் அவரைத் தீவிர தேசபக்தராக்கி 'தேசபக்தன்' ஆசிரியருமாக்கிற்று. ஆசியாவின் தொழிற்சங்க முதல் அமைப்பிற்கு அவரும் காரணமாக விளங்கினார். காந்தியத்தைத் தமிழ்நாட்டில் பரப்பும் பணியில் முதல்வராக நின்றார்.

காலம் செல்லச் செல்ல அவருடைய உள்ளம், எட்டாத பெரிய சோதனைகளில் ஈடுபட்டது. சமயங்களுக்கிடையே சமரசம் விழைந்தது போலவே காந்தீயம், மார்க்சீயம் என்னும் வேறுபட்ட பொருளாதாரக் கோட்பாடுகளையும் ஒன்றிணைத்துச் சமரசம் காணவிழைந்தது அவர் உள்ளம். அவருடைய கருத்துக்கு எட்டிய இந்த நோக்குகள் மக்களின் கவனத்தைப் பற்றவில்லை. எனவே, "படலாடும் அரசியலால் பத்திமனம் போச்சே!" என்று இரங்கிப் பாடிவிட்டு, அன்றாட அரசியலிலிருந்து ஒதுங்கி வாழத் தொடங்கினார் திரு. வி. க.

கடைசிக் காலத்தில், கண்பார்வை இழந்த நிலையிலும், அவர் உள்ளம் சமரச நோக்கில் ஒளிபெற்று நின்றது. பலவேறு சமய முதல்வர்களையும் கடவுளர்களையும் பாடிப் பரவினார். திருமால் அருள்வேட்டல், முருகன் அருள் வேட்டல், கிறிஸ்துவின் அருள்வேட்டல், அருகன் அருகே, படுக்கைப் பிதற்றல் முதலான பொதுமைநெறி நூல்கள் பலவும் அவர் இறுதிக் காலத்தில் இயற்றியவை.

இயற்கை வாழ்வு பெண்ணின் பெருமை, சமயசமரசம் என்னும் பல கோட்பாடுகளை இவர் துலக்கியிருந்தாலும் அவை யாவும் பலநூறு பேரின் பணிகளில் ஒன்றிரண்டாகவே மதிக்கப்படுகின்றன; அவைகளின் வழிமுறை என்பதாக ஒன்று அவர் காட்டிய வீறுடன் தொடர்ந்து வரவில்லை. தமிழ்ப் பத்திரிகைத் துறையில் மட்டுமே அவருடைய பணி தலைமைப்பணியாக ஏற்றுப் பின்பற்றப்பட்டது. அந்தத் துறையிலேதான் ஒரு பெரிய தேவையை அவருடைய தொண்டு நிறைவு செய்தது; அந்தத் துறையிலேதான் அவருடைய பணி ஒரு பெரும் புரட்சியையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. பத்திரிகை ஆசிரியருக்குரிய பரந்த பார்வை, தீரம், நடுநிலை முதலிய குணங்களும், தமிழ்ப் பத்திரிகைக்குரிய தமிழ்த்தன்மை ஊட்டும் ஆற்றலும் அந்நாளில் அவரிடமே அமைந்திருந்தன. அந்த இயல்புகளெல்லாம் ஒருங்கு செயற்பட்டுத் தமிழ்ப் பத்திரிகை உலகை இன்றுள்ள நிலைக்கு வழிதிருப்பின, எனவே, பன்முகப் பணிகள் ஆற்றிய திரு. வி க.வின் பெருமை தமிழ்ப் பத்திரிகை முன்னோடி என்ற முனையிலேயே முழு மலர்ச்சி காட்டி மணக்கிறது...

நிறைவுற்றது.

இளங்கோவடிகளின் இலக்கிய அறிவு

புலவர் பி. விருத்தாசலம், பி. ஏ.
கரந்தைப் புலவர் கல்லூரி.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தமிழிலே எழுதப்பட்ட முதற்காப்பியம் மட்டுமன்று, முதன்மையான காப்பியமுமாகும். சிலப்பதிகாரம் தன்னிகரற்ற காப்பியமாக விளங்குவதற்குக் காரணம் பலவுண்டு. அவற்றுள் தலைசிறந்தது, தொல்காப்பியம் முதலான பழைய இலக்கண நூல்களிலும், பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் ஆகிய பண்டைத் தமிழர்தம் பண்பாட்டுப் பேரிலக்கியங்களிலும் நூலாசிரியர் இளங்கோவுக்கு இருந்த ஆழ்ந்து அகன்ற பேரறிவே ஆகும். தம்முடைய மொழியிலுள்ள பழைய சிறந்த நூல்களைக் கற்றுணரும் திறனுடையவர்தாம் காலத்தால் அழியாத கவின் மிகு காப்பியங்களைப் படைக்க முடியும் என்பதற்கு இளங்கோ மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

முன்னோர் மொழிபொருளே அன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவது சிறந்த நூலாசிரியர்தம் பண்பாகும் அந்தப் பண்பு இளங்கோ அடிகளிடம் நிரம்ப இருந்தது. அதனால், அவர் தமது காப்பியத்தில் முன்னோர் நூல்களில் உள்ள நுண்ணிய கருத்துக்களையும், சிந்தைக்கினிய சொற்றொடர்களையும், செவிக்கினிய ஓசைகளையும் ஏற்ற இடங்களில் எடுத்து ஆண்டுள்ளார். அவை இவையென இனிக் காட்டப்பெறும்.

சிலப்பதிகாரத்தின் இறுதிக் காண்டமாகிய வஞ்சிக் காண்டத்தில் காட்சிக்காதை, கால்கோட்காதை, நீர்ப்படைக் காதை, நடுகற்காதை, வாழ்த்துக்காதை, வரந்தரு காதை என்பன காதைத் தலைப்புக்களாக உள்ளன. போரிலே செஞ்சோற்றுக் கடன்கழித்து, தம்மைச் சோறிட்டுப் புரந்த வேந்தர் கண்களிலே நீர்மல்குமாறு புகழ்மிகுந்த சாவு பெற்றுத் தெய்வமான பெருந்திறல் மறவனுக்கு, அவன் பெயரும் பீடும் எழுதிய கல்நட்டு, பீலியும் மாலையும் சூட்டி வணங்குவது தமிழகத்து மரபு. அவ்வாறு மாண்ட மாவீரனுக்குக் கல்நடும் செய்தியைக்

"காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல்,
சீர்த்தகு மரபின் பெரும்படை, வாழ்த்தலென்று
இருமூன்று வகையின் கல்லொடு புணர"
(தொல். புறத்திணை-5)

எனத் தொல்காப்பியம் கூறும் இத்தொல்காப்பியப் பகுதியே மேற்கூறிய வஞ்சிக்காண்டத்துக் காதைகளுக்குப் பெயரிடவும், செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுத்த வரலாற்றை விளக்கவும் இளங்கோவிற்கு உதவிற்று மேலும், படை இயங்கு அரவம், நூழிலாட்டு, முன்றேர்க் குரவை. பின்றேர்க் குரவை, போர்க்கள வேள்வி முதலிய புறத்துறைகள் யாவற்றையும் விளக்குவது போலவே வஞ்சிக்காண்டம் முழுவதும் அமைந்துள்ளது.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"—என்னும் குறளின் முதலடியை அப்படியே எடுத்தாண்டு மதுரைக் காண்டத்தின் இறுதி வெண்பாவை இளங்கோவடிகள் எழுதியுள்ளார்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுதகைமை திண்ணிதால்-தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து"

கோவலனைக் கள்வன் என்று கருதிக் கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியன், கண்ணகி வழக்குரைத்த பின் உண்மையுணர்ந்து, "யானோ அரசன்? யானே கள்வன்" என்று கூறி, அரியணையிலிருந்து கீழே வீழ்ந்து உயிர் துறந்தான் அல்லவா? அப்போது பாண்டிமாதேவியின் முன் "அரசோடு ஒழிப்பேன் மதுரையும்" என்று வஞ்சினங் கூறிய கண்ணகி என் கணவனுக்குக் கேடு செய்ததாலேயே உன் கணவன் இறந்தான் எனச் சொல்லவிரும்பி "கோவேந்தன் தேவி! முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்" என்று கூறுகின்றாள். வஞ்சின மாலையில் வரும் இப்பகுதி "பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்" என்னும் குறளைச் சிறிது மாற்றி எழுதப் பட்டுள்ளது இளங்கோ வள்ளுவர் நூலைப் பலகாலும் கற்றவர் என்பதற்கு இவ்விரண்டு சான்றுகளே சாலும். இதனைச் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்கள்

"வழி வழி வள்ளுவர்" என்னும் தம் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இனி, இளங்கோவடிகள் பத்துப்பாட்டையும், எட்டுத் தொகையையும் கற்றுத் துறைபோகிய வித்தகர் என்பதற்குப் பலசான்றுகள் காட்டுவேம் முதலாவதாக நூலின் தொடக் கத்தில் இளங்கோ அடிகள் கடவுளர் எவரையும் குறிப்பிட்டு வணக்கம் கூருது, திங்களையும், ஞாயிற்றையும், மாமழையை யும் போற்றுவதைக் குறிப்பிடவேண்டும் கலித்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு, முதலிய தொகை நூற்களில் சிவபெருமான் வணக்கமும், குறுந்தொகையில் முருகன் வணக்கமும் நற்றிணையில் திருமால் வணக்கமும் கூறப்பட்ட பின்பே பிறபாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இம்முன்ஞேர் நூல்கள் கடவுள் வணக்கம் கூறுவதுபோல் கூருது, திரு வள்ளுவர்போல் தமக்கென ஒரு தனிநெறி வகுத்துக்கொண்டு இளங்கோ கடவுள் வாழ்த்துக் கூறினுர். இளங்கோ எல்லாச் சமயங்களையும் ஒப்பக் கருதியவர். ஆதலின், எந்த ஒரு தனிப்பட்ட சமயத்தவருக்கும் உரிய கடவுள் வணக்கம் கூருது இயற்கைப் பொருள்களுள் ஒன்ருகிய திங்களுக்கு முதற்கண் வணக்கம் கூறினுர் என்றெல்லாம் அறிஞர் கூறுகின்றனர். சிவபெருமானை வழிபடு கடவுளாகக் கொண்ட சைவ சமயம் தமிழ்நாட்டின் பழம்பெரும் சமயம் ஆகும். சிவபெருமானை வணங்குவோர் அவன் முடிமீது இருக்கும் இளம்பிறையையும் தொழுவது மரபு இது மதுரைக்காஞ்சி போன்ற பழைய இலக்கியங்களால் அறியலாகும் செய்தி. இளம்பிறையைத் தொழும் வழக்கம் காலப்போக்கில் பெருகி, இளம்பிறை வளர்ந்து முழுமதியம் ஆகிறபோது அம்முழுமதியையும் வணங்கும் வணக்கமாக வளர்ந்திருக்கவேண்டும். எனவே "திங்களைப் போற்றுதும்" என இளங்கோ கூறினும் சிவ பெருமான் வணக்கம் கூறப்பட்டதாகவே கொள்ளல் தகும். அவ்வாறே "ஞாயிறு போற்றுதும்" என இளங்கோ கூறி யதைச் சக்கரப் படையுடைய திருமால் வணக்கமாகவும், "மாமழை போற்றுதும்" எனக் கூறியதை மழைக்கடவுளா கிய இந்திரனை வணங்கியதாகவும் கொள்ளலாம் அன்ருே?

உறையூர் மருத்துவன் தாமோதரஞர் சோழன் குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்னும் சோழ வேந்தனைப் பாடிய புறநானூற்றுப் பாடலில் பாலைநில

வழியே சென்ற தாமும் தம் விறலியும் வானகத்தே விளங்கிய முழு மதியினைக் கண்டதாகவும், கண்டதும் சோழவேந்தனது வெண்கொற்றக் குடையை ஒக்குமாகலின் அம்முழுமதியைக் கைகூப்பித் தொழுததாகவும் கூறுகிறார்.

.... விசும்பின்
உச்சி நின்ற உவவுமதி கண்டு
கட்சி மஞ்ஞையின் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து
தொழுதனம் அல்லமோ ....
... ... வளவன்
வெயில்மறைக் கொண்ட உருகெழு சிறப்பின்
மாலை வெண்குடை ஒக்குமால் எனவே"

(புறம் – 60)

இவ்வாறே, "சோழ அரசனது வெண்கொற்றக் குடையினைப் போலவே உலக மக்கள் துன்பத்தை ஒழிப்பதால் யாம் திங்களைப் போற்றுகிறோம்" என்னும் கருத்தில்,

" திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடை-
-போன்றிவ்
வங்கண் உலகளித் தலான்"

என இளங்கோவடிகள் கூறுவதற்கு மேற்காட்டிய புறப்பாடலே அடிப்படை எனலாம். இதனைத் திருவாளர். நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தமது சிலப்பதிகார உரையில் நன்கெடுத்துக் காட்டியுள்ளார்.

இளங்கோவடிகள் சிலம்பின் கதைத் தலைவி ஆகிய கண்ணகியை முதன் முதலாக அறிமுகப்படுத்தும்போது கண்ணகி, செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளை ஒத்த புகழுடைய அழகிய வடிவத்தை உடையவள் என்றும், குற்றமற்ற வடமீனின் (அருந்ததியின்) கற்பு இவள் கற்பை ஒக்கும் என்றும் கூறிப் பெண்கள் எல்லாம் தொழுது ஏத்தப் புகழ் பெற்று விளங்கிய பெருங்குணத்துக் காதலாள் என்றும் கூறுகிறார்.

" அவளுந்தான்
போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகியென் பாள்மன்னோ

(மங்கல வாழ்த்துப் பாடல் 25-29)

மேலும், இளங்கோவடிகள் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடந்த பின்னர் " மலர் சூடிய தழைத்த கூந்தலையுடைய அழகிய பொற்கொடி போன்ற மகளிர் கண்ணகியை வாழ்த்தி மங்கலம் பொருந்திய இருக்கை ஒன்றிலே இருக்கச் செய்தனர் என்னும் செய்தியைக் கூறும் போது கண்ணகியை " மண்ணுலகத்து அருந்ததி " என்று குறிப்பிடுகின்றார்.

" போதொடு விரிகூந்தல் பொலனறுங் கொடியன்னார்

....

அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை
மங்கல நல்லமளி ஏற்றினார்

(ம. வாழ்த்துப்பாடல் 60-64)

என்பன பாடல் அடிகள்

இவ்வாறு, காப்பியத் தலைவியாகிய கண்ணகி தேவியின் தெய்வப் பொலிவினையும், கற்பு மேம்பாட்டினையும் கவினுற விளக்குதற்கு '' வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள் '' என்னும் கலித்தொகைப் பாட்டடி இளங்கோவிற்குப் பெரிதும் உதவிற்று என்பதில் தவறில்லை அன்றோ?

கண்ணகி கணவனோடு இல்லறம் நடத்தும் போது அவர் இருவருந் துய்த்த காமப் பேரின்பம் ஈடு இணையற்றது. கண்ணகியும் கோவலனும் மண்ணுலக வாழ்வில் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, பொருள் நிலையாமை ஆகியவற்றைக் கண்டு அவை உள்ளபோதே எல்லா இன்பங்களையும் துய்த்திடக் கருதி, காமனும் அவன் மனைவியும் போலக் காதலால் ஒருவர் ஒருவரிற் கலந்து, சினத்தையுடைய பாம்புகள் ஒன்றுபட்டுத் தழுவினாற் போலத் தழுவி, ஒருவரை ஒருவர் விட்டு நீங்காராய், அழகு கெடாத இன்பத்தை எல்லாம் துய்த்தனர்.

" தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து-நாமம்
தொலையாத இன்பமெல்லாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று "

கண்ணகி கணவனேடு இத்தகைய காமப் பேரின்பம் துய்க்கவேண்டும் என்றே அவள் திருமணத்திற்கு வந்திருந்த பெண்கள் எல்லாரும் வாழ்த்தினராம். 'கண்ணகி தன் காதலனைக் கண்ணினும் மனத்தினும் பிரியாமல் இருக்க வேண்டும்' என்பதும், 'அவள் கணவனும் அவளைத் தழுவிய கையை ஞெகிழ்த்தாது இருக்க வேண்டும். இருவரும் தம் கூட்டத்திற்கு இடையீடின்றி நெடிது வாழ்வாராக' என்பனவுமே அப்பெண்டிர் வாழ்த்து.

> "போதொடு விரிகூந்தல் பொலனறுங் கொடியன்னுர்
> காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
> தீதறுக எனவேத்தி (ம. பாடல் 60-63)

இளங்கோ வடிகள் இப்பகுதியை எழுத,

> "மணிபோல அரும்பூழ்த்து மரமெல்லாம் அலர்வேயக்
> காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை ஞெகிழாது
> தாதவிழ் வேனிலோ வந்தன்று வாரார் நம்
> போதெழில் உண்கண் புலம்ப நீத்தவர்"
>
> (கலித்தொகை 33 : 6-10)

என்னும் கலித்தொகைப் பகுதி துணைபுரிந்திருக்கலாம் அன்றோ?

காண்பதற்கரிய காட்சியைக் காண்பவர் கண்ணை இமைக்காது காண்பர். அப்போதுதான் அவ்வழகிய காட்சியை முற்றிலுமாகக் கண்டு இன்புற முடியும். வாழ்க்கையில் அடிக்கடி காணமுடியாத காட்சிகள், நாள்தோறும் காணமுடியாத காட்சிகள் சில உலகில் நடைபெறுவதுண்டு. அரிதான அத்தகைய வியத்தகு காட்சிகள் வாழ்க்கையில் எப்போதோ ஒருமுறை இருமுறை மட்டுமே நிகழும். கண்டோர் உள்ளத்தில் கழிபெருவகை ஊட்டத்தக்க அக்காட்சிகளைக் காணக் கொடுத்துவைத்திருக்க வேண்டும்; மாதவம் செய்திருக்க வேண்டும். தவம் செய்யாது தம் வாழ்நாட்களை அவமாக வீணே கழித்தோரால் மேற்சுட்டிய போற்றத்தகு காட்சிகளைக் காண இயலாது போய்விடும். நற்காட்சிகளைக் கண்டு களித்தோர் கண்களே உண்மைக் கண்கள்; காணுதோர் கண்கள் மனிதக் கண்கள் அல்ல; அவை மரக் கண்கள்: மயில் தோகைக் கண்கள்.

(தொடரும்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தமிழ்நாட்டு ஓவியங்கள்

திரு J. M. சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ. பி. எல்.

பிற்கால ஓவியங்கள்.

இதுவரை கி. பி இரண்டாம் நூற்றுண்டு முதல் ஐந்தாம் நூற்றுண்டினவான சங்க காலத் தமிழ் நாட்டு ஓவியக் குறிப்புக் கள் கூறப்பெற்றன. இனி, நமக்குக் கிடைத்துள்ள 7-9 ஆம் நூற்றுண்டினதான சித்தனவாசல் ஓவியக்கலையையும் உணர்ந்தோம். இதே காலத்து வேறு சித்திரங்கள் இன்னும் மாமண்டூர், திருமய்யம், சோமபாளையம், திருமலை கயிலாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில், பாலாற்றுங்கரையிலுள்ள திருப்பருத்திக்குன்றம் சமணக் கோயில்களிலும் இடம் பெற்றுள்ளன. சென்ற ஆண்டில் விழுப்புரம் செஞ்சிப் பெருவழியின் 17-ஆவது மைலில் உள்ள ஒரு குன்றின் மேலுள்ள பனமலைக் கோயிலில் அப்சரர்கள், கந்தருவர்கள், அக்கால மக்களுடைய உருவங்கள் அக்கோவில் சுவற்றில் தீட்டப் பெற்றுள்ளவை கண்டுபிடிக்கப்பட்டன. கடையநல்லூருக் கடுத்த திருமலைப்புரம் சித்திரங்கள், 8-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவை எனக்கூறப்படும். இவைகளை அடுத்துச் சோழரது இரண்டாம் பேரரசை நிறுவிய விசயபாலன் எடுப்பித்த நார்த்தாமலை விசயாலய சோழீச்சுரத்தவையாகும். சோழர்களுடைய உன்னத ஓவியங்கள் தஞ்சைக் கோவிலிலுள்ளவைகளேயாம். இதற்கு மேல் 15—16—17-ஆம் நூற்றுண்டுகளில் தமிழ்நாடு விசயநகரப் பேரரசின் கீழ்ப் படிந்திருந்தது. விசயநகர மன்னர்கள் கலைஞர்கள், அக் காலத்தில் சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் முதலியவை எங்கும் நல்லுணர்வு பெற்றுத் திகழ்ந்தன. அக்காலப் பழமையான ஓவியங்கள் (16, 17-வது நூற்றுண்டினவை) லேபாக்ஷித்திலும், வீரபத்திரசாமி கோயில் நாட்டிய மண்டப சோம்பள்ளியிலும், போளூர்க்கடுத்த திருமலையிலும், மலையடிப்பட்டியிலும், திருக்கோகர்ணத்திலும், திருரங்கம், மதுரை, சீவில்லிபுத்தூர். இன்னும் பல கோயில்களிலும் காண்பதாகின்றன திருப்பருத்திக்குன்றத்தில் சமண ஆலயத்தின் மண்டபத்தில் முழுதிலும் முகட்டிலும் 24 தீர்த் தங்கரர்களின் சரிதமும் வரலாருக தீட்டப்பெற்றிருப்பதையும் காணவேண்டுவதாகும்.

தஞ்சைச் சோழர்காலச் சுவர் ஓவியங்கள்.

ஏழாம் நூற்றாண்டிற்குப் பின் தஞ்சைப் பெரிய கோவிற் சுவர் ஓவியங்கள் 11-ஆவது நூற்றாண்டினதாகும் இம் மகத்தான திருக்கோயிலை தஞ்சைச் சோழ மன்னர்களில் தலைசிறந்த முதலாவது இராசராசன் எடுப்பித்தான். அக் கோயிலின் தோற்றமும் பெருமிதமான அமைப்பும், அச் சோழனது விசாலமான சமய நோக்கிற்கும், அபரிமிதமான தெய்வ பக்திக்கும், அவனது கலை ஞானத்திற்கும், சான்று பகர்வன. அதனின் ஒவ்வொரு பாகத்திலும் எத்திற சிற்பச் செல்வங்களைக் கொண்டு நிறைத்தனனோ அவ்விதமாகவே தஞ்சைப் பெருவுடையாரின் கருவறையின் திருச்சுற்று மாளிகையிலும் காணற்கரிய ஓவியங்களை கொண்டு நிறைப் பித்தான். அவை 1931-இல் தான் அண்ணுமலைப் பல்கலைக் கழகச் சரித்திர ஆசிரியர் எஸ், கே. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.

அசந்தா ஓவியங்களை நிகர்த்தன. இந்திய ஓவியக்கலைச் சரித்திரத்தில் ஒரு தனியிடம் பெற்றவை. 9ஆவது நூற்றாண்டதான பல்லவ கயிலாசநாதர் கோவில் ஓவியங்களுக்குப் பின் 11-ஆவது நூற்றூண்டு வரை எவ்விடத்திலும் ஓவியங்கள் அரிதாயின. இவை தீட்டப்பெற்ற ஒன்பது நூற்றூண்டுகளுக் குப் பின்னர் நமக்குக் கிடைத்த அரிய செல்வங்களாகும். அவைகளைச் சேமித்து வைத்த இடம் கவனிக்கற்பாலதாகும். இறைவன் கருவறையின் திருச்சுற்று மாளிகை ஒரு ஆள் செல்லத்தகும் மிகக் குறுகியது. இருள் அடர்ந்தது. ஆயினும் அதன் சுவர்களிருபக்கமும் அடி முதல் மேல் தளம் வரை அழகிய வர்ணங்களால் தீட்டிய அரிய ஓவியங்கள் ஆகும்.

ஆனுல் அச் செல்வங்கள் முழுதுங் கிடைத்தனவா? இல்லை! அதற்கும் ஒரு இடையூறு-ஒரு கிரகணம்-அக்கிர கணம், அவைகளுக்கு நான்கு நூற்றூண்டுகளுக்குப் பின்னர், பிடித்தது. தஞ்சை நாயக்கர் காலம். அவர்களும் கலை வல்லுநர். சிற்பம் இசை, நாடகம், நாட்டியம், தலைநின்று ஆடியது. ஓவியத்திலும் தமது கைத்திறமையைக் காட்ட முன் வந்தனர். அதனை விளக்க அவர்களுக்கு இப் பெரிய கோயிலில் வேறு எங்கும் இடம் கிடைத்திலதுபோலும். இக்கரு

வறைத் திருச்சுற்றையே நாடினர். அதன் ஓவியங்களின் சிறப்பு அவர்கள் மனத்திற்கு எட்டவில்லை அவசரக்காரர்கள் அவர்கள் குறுகிய ராஜ்ஜியபார 125 ஆண்டுகள்போல் எப்படியும் அவர்கள் ஓவியங்கள் நிலைபெறவேண்டும். சோழர் கால ஓவியங்களுக்கு மேல் ஒரு சிறிய சுண்ணச் சாந்தைப் பூசினுர்கள் சோழர் ஓவியங்கள் மறைந்தன. மெழுகிய சுண்ணும் பின்மேல் தமது சித்திரங்களை வரைந்தனர், அவையும் சுமார் முந்நூறு ஆண்டுகள் யாரும் அறியாமலே நின்றன.

ஆனுல் அப்பெருங் காலத்தின் தட்ப வெப்ப நிலைகள் அதனைப்பாதித்தன. சிற்சில இடங்களில் மேற்பூசிய சுண்ணம் படல் படலாகப் பெயர்ந்து விழுவதாயின. பெருவுடையாரைத் தரிசித்து, கருவறையைச் சுற்றி வரும் பக்தர்களில் சரித்திர ஆசிரியர் எஸ். கே. கோவிந்தசாமிப் பிள்ளையும் ஒருவராஞர். கலை வல்லார், ஓவியத்தில் சிரத்தையுடையவர். ஓவியங்களைக் கண்ணுற்ருர். அவைகளின் நுணுக்கங்களினை ஆராய்ந்தார். ஆராயுமிடத்து சிற்சில சுண்ணப் படல்கள் விழுந்திருப்பதையும், அதனின் கீழும் சிற்சில வர்ணங்கள் தோன்றுவதையும் கவனித்தார். அதன் தோற்றமும் அழகிய வர்ணங்களும் அவர் மனதைக் கவர்ந்தன. அப்படல்களை நீக்கி அதன் கீழுள்ள ஓவியங்கள் சில கிடைத்தன. இன்னும் பல ஓவியங்களை ஓவியக் கலைக்கு உயிர்ப்பித்துக் கொடுத்தார். இவைகள் யாவையும் புகைப்படமெடுத்தார். தனது குறிப்புக்களுடன் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பத்திரிகையில் வெளியிட்டார். அப்போது கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்களின் சிற்சில குறிப்புக்கள் கீழ்வருவன

சோழர் ஓவியம் தீட்டப்பெற்ற காலம் 10-11-ஆவது நூற்ருண்டு, சைவசமயத்தின் உன்னத காலம். அதற்கு முந்திய சமீப ஒன்பதாவது நூற்ருண்டிலேதான், ஆரூரில் சுந்தரமூர்த்தி நாயஞர் தமது வாழ்க்கை நலங்களையும். சைவ சமயத்தையும் தமது தேவாரப் பதிகங்களால் மெய்ப்பித்ததாகும்.

இவ்வோவியங்களின் ஒரு பகுதி சுந்தரரது வாழ்க்கைச் சரிதத்தைக் குறிக்கின்றன. சுந்தரரது திருமணப் பந்தல், மணத்தைக்கண்டு களிக்கப் பலர் கூடியிருக்கின்றனர். சிவபெருமான் கிழ வேதியர் உருவங்கொண்டு ஒரு கையில் குடையும், மற்ருெரு கையில் ஓலையுந்தாங்கி சுந்தரருக்கு முன்

நிற்கின்றார். ஓலை சுந்தரரது அடிமைச் சீட்டு. கிழவேதியர் இவ்வடிமை ஓலையைக்காட்டி திருமணத்தைத் தடைசெய்து ஆட்கொள்ளுகிறார். சுந்தரர் வியப்புடன் அவரை நோக்கு கின்றார். திருமணச்சுற்றம் திகைக்கின்றனர். அவர்களுக்கு எதிரே திருவெண்ணை நல்லூர் கோயில் தீட்டப்பெற்றுள்ளது. ஒரு திரள் கூட்டம் அதனுள் செல்லுகின்றது.

அதற்கடுத்து ஒரு குடியானவர் வீட்டுத் தோற்றம். பெண்கள் மண் பானையில் உலை வைத்துச் சோறு பாகம் பண்ணுகின்றனர். ஒரு வேலையாள் ஒரு பெண்ணிடமிருந்து உண்டி பெறுகின்றான்.

இவைகளுக்குமேல் சிவக்கயிலாயமலை, சிவனார் புலித் தோலின்மீது உட்கார்ந்திருக்கின்றனர். அவருக்கு முன்னர் நந்தி படுத்திருக்கின்றது. சிவ கணங்களும், முனிவர்களும் சூழ்ந்திருக்கின்றனர். இவர்களுக்கு இடையே சில அப்சரர் கள் நடனமாடுகின்றனர்.

இதற்குச் சற்றுக் கீழே சுந்தரரும் சேரமானும் தோன்று கின்றனர். சுந்தரர் வெள்ளை யானைமீது, கந்தர்வர்கள் புடை சூழ தேவகான வாத்யங்கள் முழங்க கயிலாயம் செல்கின்றார், யானையின் வேகம் உயிர்பெற்று விளங்குகிறது. அவர் நண்பர் சேரமான், தன் பாயும் வெள்ளைக் குதிரைமீது ஆவேசத்துடன் யானைக்கு முன்பாக விரைகின்றார். அவர்கள் ஒரு ஆற்றைக் கடப்பதுபோன்ற தோற்றம். நீரில் மீன் களும், நீர் வாழ்வனவும் அங்குமிங்கும் நீந்துகின்றன. மேகத்தினின்றும் பாதி தோன்றும் தேவ கந்தர்வர் இவ் விருவர்மீதும் பூமாரி சொரிகின்றனர் பல முனிவர்களும் இவர் களுடன் தோற்றம் அளிக்கின்றனர்.

மற்றொன்று, நடராசனும் பக்தர்களும் மேலைச் சுவரில் இவை விரிவாகச் சித்தரிக்கப்பெற்றுள்ளன. பொன்னம்பலம் தோன்றுகிறது. கையில் கனலேந்திய ஆடவல்லானின் ஒருபுறத் தோற்றமாத்திரம். இதற்கு எதிரே அஞ்சலி செய்த வண்ணம் ஒரு கம்பீர புருஷன் நிற்கின்றான். அவருக்கு அடுத்து மூன்று பெருமாட்டிகள் பக்திவசப்பட்டு நிற்கின்றனர். இவருக்குச் சற்றே விலகி இரண்டு சேவகர்கள் வெள்ளித்தடி தாங்கி நிற்கின்றனர். இவர்களுக்குக் கீழே மற்றொரு ஆணும் பெண்ணுமான நான்கு பிரமுகர்கள்; இவர்களுக்கும் கீழே பலதிறப்பட்ட சேவை செய்து கொண்டு நிற்கும்

சாதாரண ஆடவரும் மகளிரும். இவை அக்கால ஜன சமூக மாகும் அவர்களின் உடல் தோற்றமும், அணிகலன்களும் உடைகளும் தலையில் கொண்டை செருகியிருப்பதும் மற்றும் பல அமைப்புக்களையும் கண்டு மகிழ்தற்குரியவையாகும். இதற்கு அடுத்த வடபுறச் சுவர் மத்தியில் ஒரு அருமையான புராணக் காட்சி. காணப் பல கண்கள் வேண்டும். விரிசடைக் கடவுள் திரிபுரம் எரிக்கின்றனர். கணங்கள் சூழ விநாயகர் முருகன் அருகிருப்ப சிவபெருமான் எட்டுக்கரங்களுடன் தனது சகடை மீது வீற்றிருந்து தனது நெற்றிக்கண் திறந்து நோக்குகின்றார். அசுரர் உயிரற்று வீழ்கின்றனர். இன்னும் பலர் அவர்கள் பெண்களுடன் அங்குமிங்கும் ஓடுகின்றனர். இன்னும் சில பெண்கள் தம் வீரக் கணவர் கழுத்தைச் சுற்றிக் கொண்டு தொங்குகின்றனர். இவ்வோவியம் ஒரு அருமருந் தன்னது வீராவேசமும் சிவபெருமானின் மறக் கருணையும் தோற்றுவிக்கும் அருட்காட்சியாகும் ஒவ்வொரு சிறு அம்சமும் பல தடவைகள் கண்டு களிக்கக் கூடியவை. இதனைப் பார்த்துக் களித்த கண்களே கண்கள்.

இன்னுமொரு மருங்கில், சிவனின் ஐந்நிறத் தோற்றம். திருவாசகம் " நிறங்களோரைந்துடையாய் என்பதை விளக்கும் ஐந்து வர்ணங்கள் தோய்ந்த ஐந்து கிரீடா மகுடஞ் சூட்டிய திருமுகங்கள்.

மேற்குறிப்பிட்ட தஞ்சை நாயக்கர் ஓவியங்கள் 17-ஆவது நூற்றுண்டினதாகும். பொதுவாகப் புராண சம்பந்த மானவை திருப்பாற்கடல் கடைதல், விஷ்ணு, சிவ ஒத்த மூர்த்தங்கள் பல அக்கால உடை அணிகலன்களைக் குறிப்பது. சிறப்பாக நாட்டியக் கலையைப் பல திறப்பட்ட தாண்டவங் களைக் கொண்டு சித்திரிக்கப் பெற்றுள்ளன.

இதுகாறும் கி. பி. 2-ஆம் நூற்றுண்டு முதல் 5 ஆம் நூற்றுண்டினதான சங்ககால தமிழ்நாட்டு ஓவியக் குறிப்புக் களை வரைந்தோம். அதற்கடுத்து நமக்கு வந்திருக்கும் ஏழாவது நூற்றுண்டினதான சித்தன்னவாசல் சமண ஓவியங் களை உணர்ந்தோம். இக்காலத்தில் மற்றைய சித்திரங்களை யும், செஞ்சி, விழுப்புரத்திற்கு 17 மைலிலுள்ள பனமலையி லுள்ளது. சென்ற ஆண்டில்தான் கயிலாயநாதர் கோயில்

கண்டுபிடிக்கப்பட்டன. வைகுண்டப் பெருமாள் கோயிலிலும் 8-ஆவது நூற்றுண்டினதான கடையநல்லூருக்கு அடுத்த திருமலைப் புறத்திலும்[1] இடம் பெற்றிருக்கின்றன அப்சரர்களும், கந்தர்வர்களும் அக்கோயிற் சுவர்களில் அழகுறத் தீட்டப்பெற்றுள்ளன[1]. இதனையடுத்தவை சோழனது இரண்டாவது பேரரசை நிறுவிய விசயாலயன் நார்த்தாமலையில் எடுப்பித்த விசயாலய சோழீச்சுவரத்தில் காண்பதாகும். சோழர்களுடைய உன்னத சித்திரங்கள் தஞ்சையில் உள்ளவையேயாகும். இதற்குமேல் 15 முதல் 16, 17-ஆவது நூற்றுண்டினதாகும். அக்காலம் தென்னுடு விசயநகரப் பேரரசின் கீழ் அமர்ந்திருந்தது அக்காலத்து ஓவியங்கள் லேபாக்ஷி சிவன் கோயிலிலும் போமபள்ளி, போளூருக்கு அடுத்த திருமலையிலும் காணபதாகும் தஞ்சை நாயக்கர் சித்திரங்களையும் தஞ்சைக் கருவறையிலிருப்பவை பற்றியும் தெரிந்தோம்.

விசயநகர நாயக்கர் காலத்தவையான திருவரங்கம்—பெரிய கோயில் ஓவியங்களும் பார்க்கத்தக்கவை அவை 300 ஆண்டுகட்கு முற்பட்டவையாகும். அரங்கநாதரின் கருவறையைச் சுற்றிய திருவிண்ணிழியைத் தாங்கிய முதற் பிரகாரமும புறச்சுவரிலும், மேல்தளத்திலும் அழகுறத் தீட்டப்பெற்றுள்ளன சுவற்றிலுள்ளவை நூற்றெட்டு வைணவ திருப்பதிகங்கள் கோயில்களின் வெளித்தோற்றமும் திருச்சந்நிதியிலும் பெருமாள், நாய்ச்சியார் பல திருஉருவங்களும், ஆங்காங்கே உள்ளதுபோல், புகைப்படம் பிடித்த வண்ணம் தீட்டப்பெற்றிருப்பது ஒவ்வொன்றின் கீழும் அந்தந்த திவ்ய தேசத்தின் பெயர், பெருமாளின் பெயர் முதலிய குறிப்புக்களை தெலுங்கு எழுத்தில் வரையப்பட்டுள்ளது. இது ஒரு சிறந்த சரித்திரக் கருவூலமாகும். ஓவியத்திலும்; சமயப் பற்றிலும் கருத்தூன்றிய ஒவ்வொருவரும் காணவேண்டும். இவ்வண்ணமாகவே ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் கோவிலிலும் நூற்றெட்டுத் திருவிண்ணகரங்களை வண்ணத்தால் தீட்டப்பெற்றுள்ளது கவனித்தற்குரியதாகும்.

---

1. தஞ்சைக் கோவிலோவியங்கள் மூன்றாண்டுகளுக்கு முன்னர் இந்திய அரசாங்க குழுவினரால் பாதுகாப்புப் பெற்று அவை இனிப் பழுதுராவண்ணம் காப்புப்பெற்றும் புகைப்படம் எடுக்கப்பெற்றும் நாயக்கர் காலத்து ஓவியங்களுள்ள மற்றவைகளையும் வெளிப்படுத்தியும் வருவது போற்றப்பெறுவதாகும்.

மற்றும் திருவரங்கத்தில் மேற்கூறிய திருப்பதிகளைத் தவிர அவ்விண்ணாழியில் மேற்றகட்டில் ஸ்ரீரங்க மகாத்மீயம், விஷ்ணு புராணம் இராமாயணச் சரிதம் முதலிய புராணப் பகுதிகளை யும் பல அருமையான ஓவியங்களால் உயிர்பெற்று விளங்கச் செய்துள்ளார்கள்.

இன்னும் திருவரங்கம் நாய்ச்சியார் ஸ்ரீரங்கநாயகியின் திருக்கோயிலும் ஓவியச் சிறப்புப் பெற்றது இதன் முதல் திருவிண்ணாழிப் பிரகாரச் சுவரிலும், மேற்கட்டியிலும் புராண சித்திரங்கள் மிளிர்கின்றன. இரண்டாவது தெற்கு வெளிப் பிரகார மேற்கட்டியில் திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்ட நாயக்க மன்னர்களும், அக்கால மக்களது வாழ்க்கையையும் நன்கு புலப்படுத்துவன.

அவையுள் வேதபாடசாலையில் மாணவர்கள் பயில்வதும், விசயரங்க சொக்கநாத மன்னன், பத்தினிமார், மக்கள் முத லானவர்களின் உருவத் தோற்றமும் இன்னும் பிறவும் காணத் தகுந்தன ஓவியங்கள் ஒவ்வொன்றின் கீழும் தெலுங்கு மொழியில் அதனைப் பற்றிய குறிப்புக்கள் உள. இவைகளைத் தீட்டிய சித்திரக்காரன் இறுதியில் தான் அரங்க நாதன் திருவருட்கொண்டு தன்னாலான முழுத் திறமையுடன் இச்சித்திரங்களை வரைந்தான் எனக் குறிப்பிட்டுள்ளான் பல இடங்களில் இவை பழுதுபட்டு உதிர்ந்துள்ளன. இவை யாவும் பழுதுபார்த்து புகைப்படம் எடுப்போமாகில், திருச்சி நாயக்கர் மன்னர் காலத்து 16, 17 நூற்றுண்டதான சரித வரலாற்றைத் தெள்ளிதில் ஆராயலாம்.

மேற்குறித்தவை தவிர திருவரங்கநாதர் கோயில் ஒவ் வொரு திருச்சந்நிதியிலும் பொதுவாக எங்கும் பல சித்திரங் களைக் காணலாகும். அவை யாவும் தற்காலச் சித்திரங்களா கும். இவை தவிர சமீப காலத்தவை தமிழ்நாட்டில் சிதம்பரம், திருவாரூர் கும்பகோணம், சுசீந்திரம், திருசிராமலைக் கோயி ல்களில் காணலாம், சிதம்பரம் பாண்டிய நாயகம் எனப்பெயரிய முருகன் கோயிலில், முருகன் அவதாரம் ஆறுபடை வீடுகள் கந்தபுராணப் பல பகுதிகள் யாவும் மிகவும் வனப்புறத் தீட்டப் பெற்றுள்ளன காணத்தகுந்தவை திருவாரூர் கோயிற்

சந்நிதிகளிலும் சிறப்பாக அம்பிகையின் கோயில் முன் மண்டபத்திலும் அரங்கநாதன் பள்ளிகொண்டிருத்தலும் போற்றத் தகுந்தவை கும்பகோணம் இராமசுவாமி கோவிற் சுவர்களில் இராமாயணம் உயிர்பெற்று விளங்குகிறது கன்னியாகுமரிக் கோயில் உட்புறச் சுவர்களில் காணும் சித்திரங்களும் மிக்க வசீகரமானவை. ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் சுவர்களில் வைணவ நூற்றெட்டுத் திருப்பதி பெருமாள்களது அரிய சித்திரங்கள் காண்பதாவன. இவை நாயக்கர் காலத்தவை

மதுரைப் பொற்றுமரைக் குளச்சுவர் ஓவியங்கள்

மதுரை மீனுட்சியம்மன் கோயில் தமிழ் நாட்டுக் கோயில்களில் தனிப்பெரும் சிறப்பு வாய்ந்ததாகும். அதன் நிலப் பரப்பு சிறிதளவேயாயினும், இறைவன் சுந்தரேசனின் ஆலயப் பகுதிகளும் உட்பட வெளிச் சுற்றுமதில்களின் நீளம் 847 அடி, அகலம் 792 அடியாகும். இதன் சிறப வளங்கள் பிறிதொரு இடத்திற் கூறப்பட்டனவாயினும் அம்பிகையின் கோயில் பகுதிகளில் அதன் பொற்றும்மரைக் குளமும், எழில் நலமமைந்த அமைப்பாகும். அதன் நாற்புறமும் அழகிய தூண்களடைந்த மண்டபம். அதன் தெற்குச் சுவர்களில் மதுரையில் சிவபெருமானுடிய 64 திருவிளையாடல்களை உயிர் ஓவியங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளன. சுமார் 250 ஆண்டுகட்கு முற்பட்டவை, பல வர்ணங்களாலும் தங்க ரேக்குகளாலும் ஆகியவை நாளடைவில் பழுதுபட்டவை யாதலின் சில ஆண்டுகளுக்கு முன்னர் மறுபடியும் அவைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. முதற் சித்திரம் இந்திரன் பழி தீர்ந்தமை. பின்னர் இந்திரனது அரசவை, ரம்பை ஊர்வசிகளின் நடனம், பிரகாப்பதி திரும்புதல், அசுரனின் வதமும் அவன் பிரும்ம உறத்தி இந்திரனைத் தொடாதலும் ஒவ்வொன்றும் தெளிவும் விளக்கத்துடனும் தீட்டப்பெற்றுள்ளன. 48-ஆவது தொடர்ச் சித்திரம் பொற்றுமரைக் குளம் வந்த வரலாற்றைக் குறிப்பதாகும். இவ்வாறுக திருவிளையாடற் புராணம் சிறிது வல்லார்க்கும் இச்சித்திரம் மிகவும் பயன் அளிப்பனவாகும் இவை பற்றிய ஒரு அரும்பெரும் விளக்கத்தை, முழு வர்ணப் படங்களின் படியெடுத்து இரு நூல்களாக விளக்கியுள்ளார்கள். பாண்டிச்சேரி பிரஞ்சிய கலாசார கழகத்தினர் [1].

(தொடரும்)

கலைமகள் விழா

திருவள்ளுவராண்டு 2000. ஐப்பசித்திங்கள் 3-ஆம் நாள் (19—10—69) ஞாயிற்றுக்கிழமை மாலையில் திரு A. வேங்கட-ராமன் M. S. (Columbia) அவர்கள் (துணை இயக்குநர் விவசாயத்துறை, தஞ்சை) தலைமையேற்க கலைமகள் விழா தொடங்கியது. விழாவில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளின் சுருக்கம் வருமாறு

"இலக்கிய வழிகாட்டிகள்" –திரு. புலவர் பி. விருத்தாசலம் பி. ஏ., அவர்கள்:— கண்ணகிக்குச் சிலை வைத்ததால் சென்னையில் மழையில்லை என்ற பொய்யுரையை மறுத்து அதற்கு இலக்கியச் சான்றுகள் பல எடுத்துக்காட்டினார். "மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்ற இலக்கியக் கூற்றிற்கு வல்லமை மிக்க அரசனாக இருந்தாலும் அறநெறியில் செல்லாது மறநெறியில் செல்வானேயாயின் அவன் ஆட்சி அழிந்தொழியும். இதற்குக் கோவலன்-கண்ணகி வரலாறே சுட்டாக அமையும். மேலும் வணிகர்கள் நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு வணிகத்தை நேரிய முறையில் செய்யவேண்டும். தொழில்களில் உயர்வு தாழ்வு இல்லை. எத்தொழிலைச் செய்தாலும் அதனைச் சிறப்பாக செம்மையாகச் செய்து முடிக்கவேண்டும். இக்கருத்துக்களை பல குறள்களிலிருந்து எடுத்துக்காட்டினார்.

"குறள் காட்டும் அறிவியல்" – திரு. K. S மகாதேவன் B. SC. M. A. அவர்கள்:- அறிவியல் உண்மைகள் இக்காலத்தே பல்கிப் பெருகியுள்ளன என்றாலும், முற்காலத்தே தமிழகத்தே வாழ்ந்திருந்த புலவர் பெருமக்களிடத்தும் அறிவியல் உண்மைகள் உள்ளடங்கியிருந்தன – அக்காலத்தவரிடத்து, வாழ்வியல் உண்மைகளே பெரிதும் நிறைந்திருந்தன. அவர்கள் காட்டிச்சென்ற உவமைகளையும், உருவகங்களையும், பிறவற்றையும் ஊன்றிபார்த்தால், ஆங்காங்கே, அறிவியல் உண்மை நுட்பங்களை அறியலாம். காட்டாக நீர்ப்பொருள் சுருங்காது, சுருக்கமடையாது, என்ற அறிவியல் உண்மையை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஒளவையாரால் பாடப் பெற்ற

"ஆழஅமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர் நாழிமுகவாது நானாழி" என்ற பாடலில் காணப்பெறுகிறது மிகச் சிறிய, மென்மையான பொருளுக்கும் எடை உண்டு என்பது அறிவியல் கூறும் கருத்து. இதனையே வள்ளுவர்

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்" என்று கூறியதால் மென்மையான மயிலிறகிற்கும் எடையுண்டு, வலிமையுண்டு என்றார்.

பள்ளியில் மாணவர்கள் ஒரு சிறிய ஈயக்குண்டின் எடையைக் காண நூறு ஈயக்குண்டுகளைப் போட்டு எடை காண்பர். பின் அதனை நூறால் வகுத்து ஒரு குண்டின் எடையைக் கணக்கிடுவர். அதுபோன்றுதான் வள்ளுவர் ஒரு மயிலிறகின் எடையை (வலிமையை)க் காண ஒரு வண்டி மயிலிறகினையும் அதற்குமேல் ஒரு மயிலிறகினையும் எடுத்துக்கொண்டார். ஒரு பொருளுக்கு இயக்கம் இருப்பின் அதற்கு ஆற்றல் உண்டு என்பது அறிவியல் உண்மை. ஒரு கல் நிலத்தில் இயக்கமின்றி இருப்பின் அதற்கு ஆற்றல் இல்லை. ஆனால் அக்கல் ஒரு குன்றின் மேல் இருப்பின் அக்கல்லிற்கு இயக்கம் (நிலைமாற்றம்) ஏற்படுங்காலை மிக்க ஆற்றல் பெறுகிறது. இதனையே குணம் எனும் குன்றில் நீத்தார் எனும் கல்லினை வைத்து வள்ளுவர்,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது" என்றார். அனிச்சைச் செயல் (Reflex Action) ஒரு கால நிகழ்ச்சி போன்ற பல அறிவியல் உண்மைகள் குறளில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே அமைந்திருப்பதை எடுத்துக் கூறினார்.

தலைவர் தம் முடிவுரையில் திருக்குறள் போன்ற நூற்களிற் காணப்படும் நெறிமுறைகளைப் பின்பற்றி யொழுகுதல் புலவர்களுக்கும், மக்களுக்கும் கடனாகும் என்றும் மேனாட்டில் Ph. D. பட்டம் பெற்ற மாணவர்கள் கூட உணவு விடுதியில் பணியாளராய் உழைத்து அதன் ஊதியத்தை மாணவர் சங்கத்திற்குக் கொடுக்கின்றனர் என்றும் அதுபோன்று நம்நாட்டிலும் மாணவர்கள் உழைப்பின் பெருமையை உணர்ந்து செயலாற்றவேண்டும் என்றும் கூறினார்.

இராதாகிருட்டின இளநிலைப்பள்ளி மாணவர்கள் ஔவை தூது என்ற நாடகத்தையும், உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவிகள் கண்ணகி வழக்குரைத்த காதை என்ற நாடகத்தையும் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் மனோன்மணியத்தில் சில காட்சிகளையும திறமையாக நடித்தார்கள்.

நற்செய்தி

நமது சங்கப் பேரன்பராகிய திரு. அ. கிருட்டின மூர்த்தி. எம். ஏ., பி. எல்., பி. ஓ. எல். (ஆனர்சு) அவர்கள் தஞ்சையில் என். சி சி. துறையில் பணியாற்றி அவரின் படையதிகாரம் முற்றி, தற்போது செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரியிலுள்ள லோகநாத நாராயணசாமி அரசினர் கலைக்கல்லூரியின் முதல்வராய் 1—9—69 முதல் பணியேற்றுள்ளார்கள்.